# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

## 3. இணைச்சொற்களை வாக்கியத்தில் அமைத்தல்

இணைச்சொற்கள் என்பது தமிழ்மொழியில் இணையிணையாக அமையும் சில சொற்களைக் குறிக்கும். இணைச்சொற்களை பொருத்தமான இடங்களில் பயன்படுத்தினால் மொழிநடை சிறக்கும். சொல்லப்படும் கருத்தும் திருத்தமாய் விளங்கும். நாம் செய்திகளையும் கருத்துகளையும் பிறரிடம் கூறும் பொழுதும் சுவைப்படக் கூறுவதற்காக ஒரே பொருள்தரும் இரு சொற்களை இணைத்துப் பயன்படுத்துவது இணைச் சொற்கள் எனப்படும்.

**இணைச்சொல் விளக்கம்:**

ஒரு வாக்கியத்தில் இரு வேறு சொற்கள் இணைந்து வருவது இணைச்சொல் எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

''மாப்பிள்ளைக்கு **நிலம்புலம்** உள்ளதா?'' இங்கு நிலம் என்பது நன்செய் வயல் ஆகும். புலம் என்பது புன்செய் வயல் ஆகும்.

**இணைச்சொல் வகைகள்:**

1. நேரிணைச் சொற்கள்
2. எதிரிணைச் சொற்கள்
3. செறியிணைச் சொற்கள்

**1. நேரிணைச் சொற்கள்**

ஒரே பொருள்தரும் இரு சொற்கள் இணைந்து வருவது நேரிணைச் சொற்கள் எனப்படும்.

- **சீரும் சிறப்பும்** - மதுரையில் சித்திரைத் திருநாள் சீரோடும் சிறப்போடும் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும்.
- **பேரும் புகழும்** - நம் நாட்டுத் தலைவர்களில் அறிஞர் அண்ணா பேரும் புகழும் பெற்று வாழ்ந்தவர்.
- **ஈடு இணை** - தாய்த் தன் குழந்தையிடம் காட்டும் அன்பு ஈடு இணையற்றது.
- **உற்றார் உறவினர்** - நகுலனின் திருமணத்தை உற்றார் உறவினர் புடை சூழ்ந்து நின்று வாழ்த்தினர்.
- **நோய்நொடி** - மகிழனின் பிறந்தநாள் விழாவிற்கு வந்தவர்கள் நோய்நொடியின்றி பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்தினர்.
- **குற்றங்குறை** - பெற்றோர் குழந்தைகளிடம் உள்ள குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டி திருத்தும் போது அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- **கூன் குருடு** - மானிடப் பிறவியில் கூன்குருடு இன்றி பிறப்பது சிறப்பு.
- வாடி வதங்கி - தண்ணீரின்றி வாடி வதங்கி நின்ற பயிர்கள் மழை பெய்ததால் செழித்து வளர்ந்தன.
- **மூக்கும் முழியும்** - சில குழந்தைகள் பார்ப்பதற்கு மூக்கும் முழியுமாக இருக்கும்.
- **ஆற அமர** - அயல்நாட்டில் பல ஆண்டுகள் வேலை பார்த்துவிட்டு ஊர்திரும்பிய சிவா தன் தந்தையிடம் ஆற அமர உட்கார்ந்து பேசியதால் தந்தை மிக்க மகிழ்ச்சியடைந்தார்.
- **இடுக்கு மிடுக்கு** - இடுக்கு மிடுக்கு வழியாக ஓடியத் திருடனைக் காவலர் விரட்டிப் பிடித்தனர்.
- **பாயும் படுக்கையும்** - முதுமையில் பாயும் படுக்கையுமாக இருந்த பெற்றோரை வினிதா நன்கு கவனித்தாள்.

Scanned by CamScanner

- தங்கு தடை - தேர்வு நேரத்தில் மாணவர்கள் தங்கு தடையின்றி மின்சாரம் இருக்க வேண்டும் என்று விரும்புவர்.
- முட்டி மோதி - திருவிழாக் கடையில் குதிரை பொம்மையைப் பார்த்த குழந்தை தன் தாயிடம் முட்டி மோதி வாங்கிக் கேட்டது.
- முக்கலும் முனங்கலும் - வாணி பொங்கல் பண்டிகைக்குத் தனது தந்தை புத்தாடை வாங்கிக் கொடுக்காததால் முக்கலும் முனங்கலுமாய் இருந்தாள்.
- ஒட்டி உலர்ந்து - நீண்ட நாள் மழை பெய்யாததால் நெற்பயிர்கள் தரையோடு ஒட்டி உலர்ந்து கிடந்தன.
- தப்பித்தவறி - தப்பித் தவறி கூட நாம் பெற்றோரை மனம் நோகச் செய்யக் கூடாது.
- ஓட்டச்சாட்டம் - தேர்வுக்குச் செல்ல நேரமாகிவிட்டதால் ஓட்டச்சாட்டமாக முகிலன் பள்ளிக்குள் நுழைந்தான்.

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
9843448095

2. எதிரிணைச் சொற்கள்

ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு சொற்கள் இணைந்து வருவது எதிரிணைச் சொற்கள் எனப்படும்.

- **அல்லும் பகலும்** - காந்தியடிகள் நாட்டு விடுதலைக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார்.
- **உயர்வு தாழ்வு** - மானிடரில் உயர்வு தாழ்வு பார்ப்பது பாவம்.
- **அடியும் நுனியும்** - சிவனின் அடியும் நுனியும் தேடிக் காண முடியாமல் விஷ்ணு திகைப்படைந்தார்.
- **உள்ளும் புறமும்** - வீட்டின் உள்ளும் புறமும் தூய்மையாக வைத்திருந்தால் சுகாதாரம் மேம்படும்.
- **குறுக்கும் நெடுக்கும்** - கடன் பிரச்சனையில் சிக்கிய கோபு அதனை எப்படித் தீர்ப்பது என்று அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து ஆலோசித்துக் கொண்டிருந்தான்.
- **உச்சி முதல் உள்ளங்கால் வரை** - தனக்கு பிறந்த குழந்தையைத் தாயானவள் கட்டி அரவணைத்து உச்சி முதல் உள்ளங்கால் வரை முத்தமிட்டாள்.
- **ஐயந்திரி பற** - நாம் கற்கும் நூல்களை ஐயந்திரிபெற கற்க வேண்டும்.
- **இருளும் ஒளியும்** - வாழ்வில் இன்பமும் துன்பமும் இருளும் ஒளியும் போல மாறி மாறி வரும்.
- **கிழக்கும் மேற்கும்** - சூரியன் தோன்றி மறையும் திசைகள் கிழக்கும் மேற்கும் ஆகும்.
- **வடக்கும் தெற்கும்** - காந்தம் எப்பொழுதும் வடக்கும் தெற்கும் திசையைக் காட்டும்.
- **ஏட்டிக்குப் போட்டி** - தேர்தல் பிரச்சாரத்தில் வேட்பாளர்கள் ஏட்டிக்குப் போட்டியாக பேசினர்.
- **மேடு பள்ளம்** - இன்றைய சாலைகளில் மேடு பள்ளங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

3. செறியிணைச் சொற்கள்

ஒரு சொல்லின் பண்பு அல்லது செயலை வலுவூட்டும் விதமாக ஒத்த பொருளுடைய இரு சொற்கள் இணைந்து வருவது செறியிணைச் சொற்கள் எனப்படும். செறியிணைச் சொற்கள் பின்வரும் இரு வழிகளில் அமையும்.

i) பண்பு செறியிணைச் சொற்கள்:

- **செக்கச்செவேல்** - கிளியின் அலகு செக்கச்செவேல் என்றிருக்கும்.
- **வெள்ளை வெளீர்** - பௌர்ணமி நிலவின் ஒளியில் தாஜ்மஹால் வெள்ளை வெளீர் என மிளிர்ந்தது.
- **பச்சைப்பசேல்** - ஊட்டி மலையில் இயற்கை அன்னை பச்சைப் பசேல் என விரிந்து கிடக்கிறாள்.
- **நட்ட நடுவில்** - திருடன் நட்ட நடுவில் சுவர் ஏறிக் குதித்தான்.

ii) செயல் செறியிணைச் சொற்கள்:

- **அழுதழுது** - திருவிழாக் கடையில் விளையாட்டுப் பொருட்களைக் கேட்டக் குழந்தை அழுதழுது அடம் பிடித்தது.
- **நடந்து நடந்து** - மலைப் பகுதியில் இருக்கும் தன் மாமா வீட்டிற்கு மணி நடந்து நடந்து சென்றான்.
- **கொஞ்சிக் கொஞ்சி** - தாய் தன் குழந்தையை கொஞ்சிக் கொஞ்சி மகிழ்ந்தாள்.
- **பார்த்துப் பார்த்து** - குழந்தைகள் வானவில்லைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனர்.

Scanned by CamScanner

## 4. மரபுத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல்

1. எடுப்பார் கைப்பிள்ளை - யார் சொன்னாலும் அதைக்கேட்டு நடப்பவன்

நகுலன் எதையும் தானாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரமாட்டான். பிறர் சொல்வதையே கேட்டு நடப்பான். அவனை எல்லோரும் எடுப்பார் கைப்பிள்ளை என்பர்.

2. சீட்டு கிழிந்து விட்டது - வேலை போய் விட்டது.

நந்தன் ஊதிய உயர்வுக்காகத் தலைமை தாங்கிப் போராடினான். முதலாளி அவன் சீட்டைக் கிழித்துவிட்டார்.

3. தாளம் போடுகிறான் - துன்பப்படுகிறான்

ராஜன் தன் வருவாய்க்கு அதிகமாய்ச் செலவு செய்தான். கைப்பொருள் இழந்தான். இன்று சாப்பாட்டிற்கே தாளம் போடுகிறான்.

4. கயிறு திரிக்கிறான் - இல்லாததை சொல்கிறான்

வானத்திலிருந்து ஒளிப்பிளம்பாகத் தட்டு வடிவில் ஒன்று இறங்கியது. உடல் முழுவதும் கவசம் அணிந்த இருவர் அதில் இருந்தனர். அருகினில் சென்று பார்ப்பதற்குள் அந்தத் தட்டு மேலே பறந்து விட்டது என ஒருவன் சொன்னான். அதைக் கேட்டவர்கள் கயிறு திரிக்கிறான் என்றார்கள்.

5. பஞ்சாய்ப் பறக்கிறான் - பொருளின்றி அலைகிறான்

தன் மகன் மேனிலைப் பள்ளி பொதுத் தேர்வில் உயர்ந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சியடைந்ததற்கு அவன் தந்தை மகிழ்ந்தார். ஆனால் அவனைப் பொறியியல் கல்லூரியில் சேர்ப்பதற்குப் பஞ்சாய்ப் பறக்கிறார்.

6. கொடிகட்டிப் பறத்தல் - தனி புகழோடு வாழ்தல்

திரு.வி.க அவர்கள் இலக்கிய சொற்பொழிவாளராய் கொடிகட்டிப் பறந்தார்.

7. கோயில் பெருச்சாளி - பொதுச் சொத்தை திருடி தின்பவன்

அரசியல் வாதிகளுள் சிலர் கோயில் பெருச்சாளிகளாய் உலா வருவதைக் கண்டு மக்கள் அருவறுப்புக் கொள்கின்றனர்.

8. மனப்பால் குடித்தல் - கற்பனை செய்தல்

ஏறிய விலைவாசி இறங்கும் என்று சிலர் மனப்பால் குடிக்கிறார்கள்.

9. மலையேறிவிட்டது - பழைய பழக்க வழக்கம் மறைந்து விட்டது

அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து வாழ்ந்த கூட்டுக் குடும்ப நிலை மலையேறி விட்டது.

10. புத்தகப் பூச்சி - உலகறிவின்றி நூலறிவு மட்டுமே உள்ளவன்

கதிரேசன் எப்பொழுதும் ஏதாவதொரு நூலைப் படித்துக் கொண்டிருக்கும் புத்தகப் பூச்சி அவனுக்கு உலகியலறிவே இல்லை.

11. மதில்மேல் பூனை - நிச்சயம் இல்லாத நிலை

லட்சுமணன் வகுப்பில் அன்றன்று நடத்திய பாடங்களை அப்போதைக்கு அப்போது படிக்காமல் தேர்வு நேரத்தில் படித்தான். அவனுடைய தேர்வு முடிவு மதில் மேல் பூனையாய் இருந்தது.

12. முதலைக் கண்ணீர் - பொய் அழுகை, ஏமாற்றுதல்

தேர்வில் அடுத்த மாணவனைப் பார்த்து எழுதிய மாணவனைப் பிடித்த ஆசிரியரிடம் அந்த மாணவன் தான் பார்த்து எழுதவில்லை என்று முதலைக் கண்ணீர் வடித்தான்.

13. ஆகாயத் தாமரை - இல்லாத ஒன்று

இலக்கியத்தில் பயின்று வரும் அன்னைப் பறவைகளுக்கு ஆகாயத் தாமரையை உவமையாக்குகின்றனர்.

14. ஓலை வந்து விட்டது - ஆணை கிடைத்து விட்டது

அலுவலர் ஒருவர் தம் சொந்த ஊருக்கு மாற்றல் வேண்டிப் பல ஆண்டுகளாக முயன்றார். கடைசியில் அவருக்கு ஓலை வந்துவிட்டது.

Scanned by CamScanner

15. அவலை நினைத்து உரலை இடித்தல் - ஒன்றை எண்ணி மற்றொன்றைச் செய்தல்

அவலை நினைத்து உரலை இடித்தல் போல மேலாளர் தம் தலைமை எழுத்தரைக் கோபிக்கவே, அவர் தம் கீழ்ப் பணியாற்றும் கடைநிலை ஊழியரைக் கோபித்தார்.

16. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது - படித்தது அப்படியே வாழ்வுக்குப் பயன்படாது

இன்றைய கல்வி முறை வாழ்க்கைக்குப் பயன்படாது என்பதை உணர்ந்த பெரியோர் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்கிறார்கள்.

17. ஆயிரங்காலத்துப் பயிர் - நீண்ட காலத்திற்குரியது

திருமணம் என்பது ஆயிரங்காலத்து பயிர் என்று முன்னோர் கூறுவர்.

18. அவசரக் குடுக்கை - எண்ணித் துணியாதார்

குமரன் எதற்கெடுத்தாலும் அவசரக்குடுக்கை போலப் பேசி வீணாக வம்பில் மாட்டிக் கொள்வான்.

19. கம்பி நீட்டல் - சொல்லிக் கொள்ளாமல் சொல்லல்

தான் செய்த தவறு தெரிந்து விட்டதால் அருண் தன் நண்பர்களிடம் கூறாமல் அந்த இடத்தில் இருந்து கம்பி நீட்டினான்.

20. காலை (னல்) நீர் - இருப்பது போல் தோன்றும் ஆனால் இராது

போட்டித் தேர்வில் எப்படியும் வென்று விடலாம் என்று இந்த முறை தேர்வு எழுதிய வளனரசு தோல்வியடைந்தால் அவனுடைய வேலை பற்றிய கனவு கானல் நீராக மாறியது.

21. குட்டிச் சுவர் - பயனின்றி இருத்தல்

அருண் பொறியியல் படித்தும் வேலைக்குச் செல்லாமல் வீட்டில் குட்டிச்சுவர் போல இருந்தான்.

22. கொட்டியளத்தல் - மிகுதியாகப் பேசுதல்

என் தோழி அருணா எப்போது பேசத் தொடங்கினாலும் கொட்டியளந்து விடுவாள்.

எம். ஏ. ஜெலஸ்டின்,
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி,
நாகர்கோவில் - 4.
9843448095

Scanned by CamScanner

## 5. உவமைத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல்

1. அடியற்ற மரம் போல

பொருள் - அடியற்ற - வேரில்லாத

பயன்பாடு - பெரும் துன்பம்

கணவன் இறந்த செய்திக் கேட்ட கண்ணகி அடியற்ற மரம் போலச் சாய்ந்தாள்.

2. அனலில் இட்ட மெழுகு போல

பொருள் - அனலில் - நெருப்பில்

பயன்பாடு - துடிதுடித்தல்

பால் காய்ச்சும் போது தவறுதலாகக் கையில் ஊற்றிக் கொண்ட கவிதா, அனலில் இட்ட மெழுகு போல வலியால் துடித்தாள்.

3. இலைமறை காய் போல

பொருள் - இலைமறை - இலையின் மறைவில்

பயன்பாடு - மறைமுகமாக

திரைப்படத்தில் ஒரு சில மர்மங்களை இயக்குநர் இலைமறைகாய்போலக் காட்டியிருந்தார்.

4. எலியும் பூனையும் போல

பொருள் - எலியும் பூனையும்

பயன்பாடு - எதிரிகளாக

ரவியும் ரகுவும் எலியும் பூனையும் போலச் சண்டையிட்டுக் கொண்டனர்.

5. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல

பொருள் - ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள், ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறந்த பிள்ளைகள்

பயன்பாடு - உடன் பிறந்தவர்களாக

ராமுவும் அவன் நண்பர்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல ஒற்றுமையுடன் பழகி வந்தார்கள்.

6. கண்ணினைக் காக்கும் இமை போல

பொருள் - கண்களைக் காப்பாற்றும் இமைகள்

பயன்பாடு - அக்கறையாக

தாய் தன் குழந்தையைக் கண்ணினைக் காக்கும் இமை போலப் பார்த்துக் கொண்டாள்.

7. கரை காணாக் கப்பல் போல

பொருள் - கரையைக் காணாமல் நடுக்கடலில் தவிக்கும் கப்பல்

பயன்பாடு - தவிப்பு

Scanned by CamScanner

www.Padasalai.Net

கூட்டத்தில் தன் தாயைப் பிரிந்த குழந்தை கரை காணாக் கப்பல் போலத் தவிதவித்தது.

8. கலங்கரை விளக்கம் போல

பொருள் - கப்பலுக்கு வழிக்காட்டும் வெளிச்சம்

பயன்பாடு - வழிகாட்டுதல்

ஆசிரியர் அறிவரசன் பாடம் கற்றுக் கொடுப்பது மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தேவையானவற்றைக் கற்றுக் கொடுப்பதால் மாணவர்களுக்குக் கலங்கரை விளக்கம் போலத் திகழ்ந்தார்.

9. கன்றினைக் கண்ட பசு போல

பொருள் - கன்றுக்குட்டியைக் கண்ட தாய்ப்பசு

பயன்பாடு - சேயைக் கண்டு தாய் அடையும் மகிழ்ச்சி

கூட்டத்தில் காணாமல் போன குழந்தையை மீண்டும் பார்த்தவுடன், நிர்மலா கன்றினைக் கண்ட பசு போல ஓடிச்சென்று தழுவினாள்.

10. காட்டுத்தீ போல

பொருள் - காட்டில் பிடித்த தீ

பயன்பாடு - வேகமாகப் பரவுதல்

சில நேரங்களில் உண்மையை விட வதந்திகள் காட்டுத்தீ போலப் பரவுவதை நாம் உணர முடியும்.

11. கிணற்றுத் தவளை போல

பொருள் - கிணற்றுக்குள் வாழும் தவளை

பயன்பாடு - வெளிஉலகம் தெரியாமல் இருப்பது

மல்லிகா படித்திருந்தாலும், கிணற்றுத்தவளை போல அறியாமையுடன் இருந்தாள்.

12. தூண்டிலில் மாட்டிய மீன் போல

பொருள் - தூண்டிலில் சிக்கிக் கொண்ட மீன்

பயன்பாடு - துடிதுடிப்பு

கொள்ளையர்களிடம் மாட்டிக் கொண்ட சிறுமி மீனா, தூண்டிலில் மாட்டிய மீன் போலத் துடித்தாள்.

13. அத்திப் பூத்தாற்போல்

பொருள் - அத்திப்பூ பூத்தது

பயன்பாடு - அரிதாக

ராமு படிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கிய பின், தொலைக்காட்சி பார்ப்பது அத்தி பூத்தாற்போல் ஆகிவிட்டது.

14. உடும்புப்பிடி போல்

பொருள் - உடும்பு சுவற்றைப் பிடித்திருப்பது

பயன்பாடு - கெட்டியாக

மாறன் தன் கொள்கைகளை உடும்புப்பிடி போலப் பற்றிக் கொண்டிருந்தான்.

www.TrbTnpsc.com

15. குடத்தில் இட்ட விளக்குப் போல

பொருள் - குடத்துக்குள் ஏற்றிய விளக்கு

பயன்பாடு - திறமையை வெளிக்காட்டாமல்

வாய்ப்புக் கிடைக்காததால் வள்ளியின் ஓவியத்திறமை குடத்தில் இட்ட விளக்கு போல இருந்தது.

16. இறகு ஒடிந்த பறவை போல

பொருள் - இறக்கைகளை இழந்த பறவை.

பயன்பாடு - செயலற்றுப் போகுதல்

மனைவியை இழந்த குமரன் இறகு ஒடிந்த பறவை போல ஆனான்.

17. ஆனை வாயில் அகப்பட்ட கரும்பு போல

பொருள் - யானையின் வாயில் அகப்பட்ட கரும்பு

பயன்பாடு - நசுங்கிப்போதல்

கரும்பு ஆலையில் இயந்திரத்திற்குள் விடப்பட்ட கரும்பு ஆனை வாயில் 'அகப்பட்ட கரும்பு போலச் சக்கையானது.

18. கப்பல் கவிழ்ந்தாற் போல

பொருள் - கப்பல் தண்ணீருக்குள் மூழ்குவது

பயன்பாடு - சோகம்

பாரதி மதிப்பெண் குறைந்ததற்கு, ஏதோ கப்பல், கவிழ்ந்தாற் போல் சோகமாக இருந்தாள்.

19. கனியிருக்கக் காயை விரும்புவது போல

பொருள் - இனிப்பான கனிகள் இருக்கும்போது கசப்பான காயை விரும்புவது.

பயன்பாடு - நல்லது இருக்க, கெட்டதை நோக்கி செல்வது.

பேசுவதற்குப் பல இனிய சொற்கள் இருக்கும் போது தீய சொற்களைப் பயன்படுத்துவது கனியிருக்கக் காயை விரும்புவது போல என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

20. கீரியும் பாம்பும் போல

பொருள் - கீரிப்பிள்ளையும் பாம்பும்

பயன்பாடு - சண்டை

கவியும் ரதியும் கீரியும் பாம்பும் போல எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருப்பார்கள்.

21. குன்றின் மேலிட்ட விளக்குப் போல

பொருள் - மலையின் மேல் ஏற்றி வைத்த விளக்கு

பயன்பாடு - அனைவரும் அறிதல்

கர்ணனின் கொடையுள்ளம் குன்றின் மேலிட்ட விளக்கு போல அனைவரது உள்ளத்திலும் பிரகாசித்தது.



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TabTnpsc.com

22. சுடச்சுடரும் பொன் போல

பொருள் - நெருப்பில் சுடச்சுட பொன் மிளிரும்

பயன்பாடு - அனுபவத்தால் தேர்ந்தவர் ஆதல்

சுடச்சுடரும் பொன் போல, வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்கள் நம்மைச் செம்மைப் படுத்துகின்றன.

23. சூரியனைக் கண்ட பனி போல

பொருள் - சூரியனைக் கண்ட பனித்துளி

பயன்பாடு - துன்பம் விலகுதல்

சூரியனைக் கண்ட பனிபோல துன்பமெல்லாம் விலக வேண்டும் என்று மாதவி கடவுளை வேண்டினாள்.

24. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைப் போல

பொருள் - சொல்வதை அப்படியே திருப்பிச் சொல்லும் கிளி

பயன்பாடு - சொல்வதையே திருப்பித் திருப்பிச் சொல்லுதல்

சிறுபிள்ளைகள் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல அவர்கள் சொன்னதையே திருப்பிச் சொல்வார்கள்.

25. நீர்மேல் எழுத்துப் போல

பொருள் - தண்ணீர் மேல் எழுதும் எழுத்து

பயன்பாடு - நிரந்தரமற்ற வார்த்தைகளைக் குறிப்பிடுதல்

குடிகாரனின் வாக்கு நீர்மேல் எழுத்துப் போலச் சொன்ன மாத்திரமே நீர்த்துப் போகும்.

26. பசுமரத்தாணி போல

பொருள் - பச்சை மரத்தில் ஆணியால் எழுதுவது

பயன்பாடு - நிரந்தரமாய் நினைவில் இருத்தல்

பசுமரத்தாணி போல சிறுவயதில் மனதில் பதிந்த நிகழ்வுகள் ஒருவரின் வாழ்வில் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும்.

27. பார்க்காததைப் பார்த்தது போல

பொருள் - பார்க்காததைப் பார்த்தது

பயன்பாடு - மலைப்பு

அலுவலகத்திலிருந்து முன் கூட்டியே வந்த தந்தையை ஏதோ பார்க்காததைப் பார்த்தது போலப் பார்த்து நின்றான் சரவணன்.

28. மழை பெய்து ஓய்தது போல

பொருள் - கனமழைக்குப் பின் மழை ஓய்ந்தது.

பயன்பாடு - பெரிய இரைச்சலுக்குப் பின் அமைதி நிலவுதல்

திருமணம் விடிந்து வந்த அனைத்து விருந்தினரும் சென்ற பின், அந்த இடம் மழை பெய்து ஓய்ந்தது போலக் காணப்பட்டது.

29. அடுத்து கட்டும் பளிங்கு போல

பொருள் - தன்னை அடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்கு

பயன்பாடு - உள்ளத்தில் இருப்பதை முகம் காட்டிக் கொடுத்து விடுவது

தன் அருகே இருக்கும் பொருளின் நிறத்தைக் காட்டும் பளிங்கினைப் போல் ஒருவனது மனதில் நிகழ்வதை அவன் முகம் காட்டும்.

30. தவளை தன் வாயால் கெட்டது போல

பொருள் - தவளை தன் வாயால் சத்தமிடுவதால் எதிரி அதன் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளுதல்

பயன்பாடு - பேசியே ஆபத்தில் மாட்டிக் கொள்ளுதல்

தவளைத் தன் வாயால் கெட்டது போல இரு திருடர்களும் திருடிய பொருளை எங்கு மறைத்து வைப்பது என்று விவாதித்ததைக் காவலர் கேட்டதால் அவர்களைக் கைது செய்தனர்.

31. நீறு பூத்த நெருப்புப் போல

பொருள் - சாம்பல் மறைத்து இருக்கும் நெருப்பு

பயன்பாடு - ஏற்கனவே இருந்த பிரச்சனை திடீரென்று வெடிப்பது

போராட்டத்தில் 'ஏற்கனவே, நீறு பூத்த நெருப்புப் போல இருந்த கோரிக்கைகள், கனன்று எரியத் துவங்கின.

32. வெறுங்கையில் முழம் போடுவது போல

பொருள் - கையில் பொருள் ஏதும் இல்லாமல் அளப்பது

பயன்பாடு - கையில் பொருள் இல்லாமல் செயலைத் திட்டமிடுவது

மழை இன்றி இவ்வுலகின் நீர் ஆதாரங்களைச் செழிக்க வைப்பது வெறுங்கையில் முழம் போடுவது போல ஆகும்.

33. இரும்பை இழுக்கும் காந்தம் போல

பொருள் - காந்தத்தால் கவரப்படும் இரும்பு

பயன்பாடு - ஈர்ப்பு

இரும்பை இழுக்கும் காந்தம் போல எறும்புகளை ஈர்த்தன இனிப்புப் பலகாரங்கள்.

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

34. எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தார் போல

பொருள் - எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் தூண்டிவிடுவதாய் எண்ணெய் ஊற்றுதல்

பயன்பாடு - பிரச்சினையைப் பெரிதாக்குதல்

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த போது, சிலர் வன்முறையில் இறங்கியதால், எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தார்போலப் போராட்டம் தீவிரமடைந்தது.

35. தாயைக் கண்ட சேயைப் போல

பொருள் - சேய் - குழந்தை

பயன்பாடு - மகிழ்ச்சி

சேகர் தன் குடும்பத்தைக் கண்டவுடன் தாயைக் கண்ட சேயைப் போல மகிழ்ந்தான்.

36. நகமும் சதையும் போல

பொருள் - நகமும் நகத்தை ஒட்டி இருக்கும் சதையும்

பயன்பாடு - நெருக்கம்

கலாவும் சீதாவும் நகமும் சதையும் போல இணை பிரியாத தோழிகளாக இருந்தார்கள்.

37. நுனிப்புல் மேய்ந்தாற் போல

பொருள் - புல்லின் நுனி

பயன்பாடு - மேலோட்டமாக

ரவி, நுனிப்புல் மேய்ந்தாற்போலப் படித்ததால் அவனால் தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விரிவாகப் பதிலளிக்க இயலவில்லை.

38. பல் பிடுங்கின பாம்பு போல

பொருள் - பல் பிடுங்கப்பட்ட பாம்பு

பயன்பாடு - செயலற்ற தன்மை

பெரிய கொள்ளைக்காரனான சேது, கைது செய்யப்பட்டவுடன் பல் பிடுங்கின பாம்பு போல ஆனான்.

39. பழம் மரம் நாடிய பறவை போல

பொருள் - பழங்கள் நிறைய இருக்கும் மரத்தைத் தேடி செல்லும் பறவை.

பயன்பாடு - பொருள் இருக்கும் இடத்தைத் தேடி செல்வது

குணாளன் செல்வந்தராக ஆனபோது அவருடைய பழைய நண்பர்கள் அனைவரும் பழமரம் நாடிய பறவை போல வந்து சேர்ந்தனர்.

40. பாம்புக்குப் பால் வார்த்தாற் போல

பொருள் - பாம்புக்குப் பாலைக் கொடுப்பது

பயன்பாடு - நல்லது செய்பவருக்கே தீங்கு விளைவிப்பது

இளகிய மனம் கொண்ட கந்தன், திருட வந்த திருடனுக்கு வேலை போட்டுக் கொடுத்து, பாம்புக்குப் பால் வார்த்தாற்போல பணமும் கொடுத்தார். ஆனால் திருடனோ கையில் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

41. புலியைக் கண்ட மான் போல

பொருள் - புலியைக் கண்ட மான்

பயன்பாடு - மிரட்சி, பயந்து ஓடுதல்

காவலரைக் கண்ட திருடன் புலியைக் கண்ட மான் போலப் பயந்து ஓடினான்.

42. பூவோடு சேர்ந்த நாரும் மணப்பது போல

பொருள் - நாரில் கட்டப்படும் பூவினால் நாரும் சேர்ந்து மணம் பெறுவது

பயன்பாடு - நல்லவர்களுடன் சேர்ந்து நன்மை அடைவது

நல்லவர்களுடன் பழகினால் பூவோடு சேர்ந்த நாரும் மணப்பது போல நாமும் நன்மை அடையலாம்.

43. முகத்தில் அடித்தாற் போல

பொருள் - அவமானப்படுத்துதல்

பயன்பாடு - அவமானம்

நெடுநாள் பகையில் இருந்த ரவி மனந்திருந்தி தன் நண்பனைப் பார்க்க வந்த போது, நண்பனின் மனைவி முகத்தில் அடித்தாற்போலப் பேசி அனுப்பினாள்.

44. வெயிலில் இட்ட புழு போல

பொருள் - சூடுதாங்காமல் துடிக்கும் புழு

பயன்பாடு - துடிப்பது

கையில் காய்ச்சின பாலை ஊற்றிக் கொண்ட மாலதி வெயிலில் இட்ட புழு போலத் துடித்தாள்.

45. கல்லில் நார் உரித்தாற்போல

பொருள் - கல்லில் இருந்து நார் எடுப்பது

பயன்பாடு - பொய்யாகக் கதை சொல்வது

மாலன் தான் செய்த தவறை மறைக்க கல்லில் நார் உரித்தாற்போலப் பல கற்பனைக் கதைகளை அவிழ்த்து விட்டான்.

46. தூங்குகின்ற புலியைத் தட்டி எழுப்பினாற் போல

பொருள் - தூங்குகிற புலியைத் தட்டி எழுப்புவது

பயன்பாடு - அமைதியாக இருப்பவரை தூண்டி விடுவது

தூங்குகின்ற புலியைத் தட்டி எழுப்பினாற்போல, அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின் உள்ளத்தில் புரட்சியை, விதைத்தன பாரதிதாசனின் கவிதைகள்.

Scanned by CamScanner

47. பசுத்தோல் போர்த்திய புலி போல

பொருள் - பசுத்தோல் போர்த்திய புலி, பசுவின் தோலைக் கொண்டு மூடியிருக்கும் புலி

பயன்பாடு - சாதுவாக நடிப்பது

பரமசாதுவான குமரன் ஒருநாள் சண்டையில் மிக மூர்க்கமாக நடந்து கொண்ட போதுதான், அவன் பசுத்தோல் போர்த்திய புலி போல என்பது தெரியவந்தது.

48. மீகாமன் இல்லா மரக்கலம் போல

பொருள் - கப்பலை வழி நடத்துபவர் இல்லாத கப்பல்

பயன்பாடு - வழிகாட்டுதல் இல்லாமல் தவித்தல்

கணவன் இறந்த பின் கமலாவின் குடும்பம் மீகாமன் இல்லா மரக்கலம் போலத் தவித்தது.

49. அவசரக்கோலம் அள்ளித் தெளித்தாற்போல

பொருள் - நிதானமாக அழகாகப் போட வேண்டிய கோலத்தை அவசரமாக அள்ளித்தெளிப்பது

பயன்பாடு - நிதானமாக செய்ய வேண்டிய செயலை அவசரமாகச் செய்வது

முன்பெல்லாம் மூன்று நாட்கள் என்று இருந்தது மாறி, ஒருநாள் திருமணத்தில் காலை, மாலை என இருந்ததும் மாறி இப்போது காலை மட்டும் அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாற்போல என ஆகியிருக்கிறது இக்கால திருமணவிழா.

50. அடிவயிற்றில் நெருப்பைக் கட்டினாற்போல

பொருள் - அடிவயிற்றில் நெருப்பைக் கட்டுவது

பயன்பாடு - பயம்

இரவில் ஆள் நடமாட்டம் இல்லாத சாலையில் சென்ற ரமாவிற்கு அடிவயிற்றில் நெருப்பைக் கட்டினாற்போல இருந்தது.

51. இடி ஓசை கேட்ட நாகம் போல

பொருள் - பாம்பு அடையும் சீற்றம்

பயன்பாடு - சீற்றம்

முதலாளிகளின் நிபந்தனைகளைக் கேட்ட ராமன், இடி ஓசை கேட்ட நாகம் போல சீறினான்.

52. ஏறவிட்டு ஏணியைப் பிடுங்கினாற் போல

பொருள் - இறங்குவதற்கு ஏணி கொடுக்காமல் இருப்பது

பயன்பாடு - பாதியில் தவிக்க விடுவது

தன் வீட்டுப் பூனையைப் பக்கத்து ஊருக்கு அழைத்துச் சென்று, அங்கேயே விட்டு வந்த சுந்தரத்தின் செயல் ஏறவிட்டு ஏணியைப் பிடுங்கினாற் போல இருந்தது.

53. காதும் காதும் வைத்தாற்போல

பொருள் - காதும் காதும் வைப்பது

பயன்பாடு - ஒருவருக்கும் தெரியாமல்

திருடிய பொருட்களைக் கொள்ளையர்கள் காதும் காதும் வைத்தாற்போல மறைத்து வைத்தார்கள்.

54. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல

பொருள் - பழம் நழுவி பாலில் விழுவது

பயன்பாடு - செய்ய வேண்டிய செயல் சுலபமாக நிறைவேறுவது

காவல் அதிகாரி வீட்டிலேயே திருட வந்த திருடனைப் பார்த்த அதிகாரிக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல இருந்தது.

55. போர் முனையிலே ஆயுதம் தேடுதல் போல

பொருள் - போர் முனையிலே ஆயுதம் தேடுதல்

பயன்பாடு - குறிப்பிட்ட பொருட்கள் நிறைய இருக்கும் இடத்திலேயே அப்பொருளைத் தேடுதல்

தலைவலியால் அவதியுற்ற மருத்துவர், அதற்கான மருந்தினை மருத்துவமனையில் தேடியது போர் முனையிலே ஆயுதம் தேடுதல் போல இருந்தது.

56. முழுப்பூசணியைச் சோற்றில் மறைந்தாற்போல

பொருள் - முழுப்பூசணியைச் சோற்றில் மறைப்பது முழுமையான பூசணிக்காயைச் சோற்றில் மறைத்து வைப்பது

பயன்பாடு - மிகப்பெரிய செயலை மறைப்பது

முழுப்பூசணியைச் சோற்றில் மறைத்தாற்போல பூரணி, தான் வேலை இழந்த செய்தியைப் பெற்றோரிடம் மறைத்தாள்.

57. வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தாற்போல

பொருள் - வளர்த்தவனையே மறக்கும் குணம்

பயன்பாடு - நன்றி மறத்தல்

வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தாற்போல செல்வம், தனது பெற்றோர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்தான்.

58. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற் போல

பொருள் - வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது

பயன்பாடு - நாசூக்காக

நண்பன் வீட்டிற்குச் சென்ற குமார், தனக்குப் பசிக்கிறது என்பதை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற் போல உணர்த்தினான்.

Scanned by CamScanner

www.Padasalai.Net

www.TrbTnpsc.com

59. விழலுக்கிறைத்த நீர்போல

பொருள் - விழல் - தேவையற்ற புல்

பயன்பாடு - தேவையற்ற

நவீன் படிப்பதற்காக அவனது தந்தை செய்த செலவுகள் எல்லாம் விழலுக்கிறைத்த நீர் போல ஆனது.

60. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினாற்போல

பொருள் - வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது

பயன்பாடு - ஒருவர் துன்பத்தில் இருக்கும் போது அவருக்கு இன்னும் துன்பம் கொடுப்பது

கணவனை இழந்து தவித்த வானதிக்குக் கடன்காரர்களின் தொல்லை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினாற்போல இருந்தது.

61. அன்ன நடை கற்கப் போய்த் தன் நடையும் இழந்தாற்போல

பொருள் - அன்னநடை கற்கப் போய்த் தன் நடையும் இழப்பது

பயன்பாடு - புதிதாய் ஒன்று செய்யத் துவங்கி, இருப்பதையும் இழப்பது

அன்னநடை கற்கப் போய் தன் நடையும் இழந்தாற்போல கணவன் மனைவி சண்டையில் சமாதானம் செய்யச் சென்ற நண்பர் சுந்தரம் அவர்களின் நட்பை இழந்து திரும்பினான்.

62. ஆகாயத்தில் கட்டிய கோட்டை போல

பொருள் - ஆகாயம் - வானம் கோட்டை - பெரிய கட்டிடம்

பயன்பாடு - முடியாத ஒன்றைக் கற்பனைச் செய்தல்

தேர்வு நேரத்தில் படிப்பில் கவனம் செலுத்தாமல், மல்லிகா தான் முதல் மதிப்பெண் வாங்குவதாக ஆகாயத்தில் கட்டிய கோட்டை போலக் கற்பனை செய்து கொண்டிருந்தாள்.

63. கண்ணில்லார் பெற்றிழந்தார் போல

பொருள் - கண்ணில்லார் பெற்றிழத்தல்

பயன்பாடு - தற்காலிக இன்பம்

வறுமையில் வாடிய இரத்தினம் குடும்பத்தினருக்கு, திடீரென்று கிடைத்த அதிர்ஷ்டக் குலுக்கல் பணம் திருடு போனது கண்ணில்லார் பெற்றிழந்தாற்போல ஆனது.

64. நவில்தொறும் நூல்நயம் போல

பொருள் - நூலின் பொருள் கற்கும்போது கற்றார்க்கு இன்பம் சேர்த்தல்

பயன்பாடு - பழக பழக இன்பம் தருவது

நவில்தொறும் நூல்நயம் போல, பழகப் பழக இன்பம் தரக்கூடியது பண்புடையாளர்களின் நட்பு.

எம். ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்,
கார்மல் மேனிலைப்பள்ளி,
நாகர்கோவில் - 4.
9843448095

Scanned by CamScanner

## 6. வாக்கியப்பிழையைத் திருத்துதல்

| | | |
|---|---|---|
| 1. | வண்டிகள் ஓடாது | வண்டிகள் ஓடா |
| 2. | அதுகள் இங்கே உளது | அவைகள் இங்கே உள (அ) அவைகள் இங்கே உளது |
| 3. | அது எல்லாம் | அவை எல்லாம் |
| 4. | மக்கள் கிடையாது | மக்கள் இல்லை |
| 5. | வருவதும் போவதும் | வருவதும் போவதும் கிடையா |
| 6. | ஒன்றோ அல்லது இரண்டோ தருக | ஒன்றோ இரண்டோ தருக |
| 7. | சென்னை என்ற நகரம் | சென்னை என்னும் நகரம் |
| 8. | எனது மகன் | என் மகன் |
| 9. | ஏற்கத்தக்கது அல்ல | ஏற்கத்தக்கது அன்று |
| 10. | அவளது தந்தை | அவள் தந்தை |
| 11. | எனக்குப் பல வீடுகள் உள்ளது | எனக்குப் பல வீடுகள் உள்ளன |
| 12. | பழங்கள் எல்லாம் அழுகிப்போயிற்று | பழங்கள் எல்லாம் அழுகிப்போயின |
| 13. | கீழே ஒரு பெரிய நாணயம் கிடந்தன | கீழே ஒரு பெரிய நாணயம் கிடந்தது |
| 14. | எனக்குப் பல வேலைகள் இருக்கிறது | எனக்குப் பல வேலைகள் இருக்கின்றன |
| 15. | என் தாயார் வந்துவிட்டாள் | என் தாயார் வந்துவிட்டார் |
| 16. | கால்கள் நடுங்குகின்றது | கால்கள் நடுங்குகின்றன |
| 17. | அவன் பாடகன் அல்ல | அவன் பாடகன் அல்லன் |
| 18. | மாணவர்கள் வந்தனர் | மாணவர்கள் வந்தார்கள் |

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | |
|---|---|---|
| 19. | மணவாளன் செய்திகளை வாசிக்கிறது | மணவாளன் செய்திகளை வாசிக்கிறார் |
| 20. | நான் சொல்வது எனக்காக அல்ல | நான் சொல்வது எனக்காக அன்று |
| 21. | தமிழ்நாட்டு மாணவர் நல்லொழுக்கம் உடையது | தமிழ்நாட்டு மாணவர்கள் நல்லொழுக்கம் உடையவர்கள் |
| 22. | புலவர்களைப் புரவலர்கள் போற்றினர் | புலவரைப் புரவலர் போற்றினர் (அ) புலவர்களைப் புரவலர்கள் போற்றினார்கள். |
| 23. | நீயும் நானும் வந்தேன் | நீயும் நானும் வந்தோம் |
| 24. | நான் பார்த்தது அவைகள் அன்று | நான் பார்த்தவை அவை அல்ல |
| 25. | பழங்கள் ஒவ்வொன்றும் சுவையாக இருந்தன | ஒவ்வொரு பழமும் சுவையாக இருந்தது |
| 26. | தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றனர் | தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றது |
| 27. | தலைவி தலைவனோடு சென்றார் | தலைவி தலைவனோடு சென்றாள் |
| 28. | புலி வந்தன; எருதுகள் ஓடியது | புலி வந்தது; எருதுகள் ஓடின |
| 29. | ஒவ்வொரு நல்ல நூல்களிலும் உயர்ந்த குறிக்கோள் ஒன்று அமைந்திருக்கும் | ஒவ்வொரு நல்ல நூலிலும் உயர்ந்த குறிக்கோள் ஒன்று அமைந்திருக்கும் |
| 30. | காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தது | காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தன |
| 31. | நரி வந்தன; ஆடுகள் ஓடியது | நரி வந்தது; ஆடுகள் ஓடின |
| 32. | மாணவன் முதல்வரை வரவேற்றனர் | மாணவன் முதல்வரை வரவேற்றான் |
| 33. | மாடுகள் பயிரை மேய்ந்தது | மாடுகள் பயிரை மேய்ந்தன |
| 34. | வயலில் ஆடும் மாடும் மேய்ந்தது | வயலில் ஆடும் மாடும் மேய்ந்தன |
| 35. | மாமரம் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கின. | மாமரம் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கியது |
| 36. | நமது தேசியக் கொடியில் மூவண்ணம் உள்ளது. | நமது தேசியக் கொடியில் மூவண்ணங்கள் உள்ளன |
| 37. | செய்திகள் வாசிப்பது கண்ணன் | செய்திகள் வாசிப்பவர் கண்ணன் |
| 38. | கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடியது | கயல்விழி என்ற பெண் நாட்டியம் ஆடினாள் |
| 39. | மலர்க்கொடி அரும்பி மலர்ந்து மணம் பரப்பின | மலர்க்கொடி அரும்பி மலர்ந்து மணம் பரப்பியது |
| 40. | அப்பா வீட்டில் இருக்குதா? | அப்பா வீட்டில் இருக்கிறாரா? |
| 41. | சேரசோழ பாண்டியர் தமிழகத்தை ஆண்டார்கள் | சேர சோழ பாண்டியர்கள் தமிழகத்தை ஆண்டனர் (அ) சேரர்களும் சோழர்களும் பாண்டியர்களும் தமிழகத்தை ஆண்டார்கள் |
| 42. | தலைவர்கள் அவர்கள் சிலையைத் திறந்து வைப்பார்கள் | தலைவர் அவர்கள் சிலையைத் திறந்து வைப்பர் |
| 43. | தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடியது பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை | தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடியவர் பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை |
| 44. | பல அறிஞர்கள் வந்தார்கள் | அறிஞர் பலர் வந்தனர் |
| 45. | அவன் ஓவியன் அல்ல | அவன் ஓவியன் அல்லன் |
| 46. | கைகள் நடங்குகிறது | கைகள் நடுங்குகின்றன |
| 47. | பத்து பழங்களில் ஒரு பழமே நல்லன | பத்து பழங்களில் ஒரு பழமே நல்லது |
| 48. | வருவதும் போவதும் கிடையாது | வருவதும் போவதும் கிடையா |
| 49. | சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அல்ல | சென்னைக்கு அருகில் இருப்பது கன்னியாகுமரி அன்று |
| 50. | அவர்தான் கூறினார் இவர்தான் என்று பாராது எவர்தான் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க | அவர்தாம் கூறினார் இவர்தாம் கூறினார் என்று பாராது எவர்தாம் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க. |

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | |
|---|---|---|
| 51. | இடதுபக்கம் இருப்பது ஔவையார் சிலை அன்று | இடப்பக்கம் இருப்பது ஔவையார் சிலை அன்று |
| 52. | கண்ணன் முருகன் மற்றும் வேலன் வந்தனர் | கண்ணன், முருகன், வேலன் ஆகியோர் வந்தனர் |
| 53. | நல்லவைகளும் கெட்டவைகளும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன | நல்லனவும் கெட்டனவும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன |
| 54. | இதனைச் செய்தது இவர் அல்லவா? | இதனைச் செய்தவர் இவர் அல்லரோ? |
| 55. | விழாவில் பல அறிஞர்கள் பேசினர் | விழாவில் அறிஞர் பலர் பேசினர் |
| 56. | ஒவ்வொரு சிற்றூர்களிலும் ஊராட்சி உள்ளது | ஒவ்வொரு சிற்றூரிலும் ஓர் ஊராட்சி உள்ளது |
| 57. | மாணவர்கள் கல்வியறிவு ஒழுக்கத்திற் சிறந்து விளங்க வேண்டும் | மாணவர்கள் கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும் |
| 58. | வனிதாமணி தன் முயற்சியால் முதலிடத்தை பெற்றது | வனிதாமணி தன் முயற்சியால் முதலிடத்தை பெற்றாள் |
| 59. | தமிழரசன் தமிழரசிக்கு எவ்வாறு உதவியது? | தமிழரசன் தமிழரசிக்கு எவ்வாறு உதவினான்? |
| 60. | புலி வந்தன | புலி வந்தது |
| 61. | எருதுகள் ஓடியது | எருதுகள் ஓடின |
| 62. | பூச்செடிகள் தோட்டத்தில் மலர்ந்து மணம் வீசியது | பூச்செடிகள் தோட்டத்தில் மலர்ந்து மணம் வீசின |
| 63. | எனக்குப் பல வேலைகள் இருக்கிறது | எனக்குப் பல வேலைகள் இருக்கின்றன |
| 64. | எனக்குப் பல வீடுகள் உள | எனக்குப் பல வீடுகள் உள்ளன |
| ,65. | இது பொது வழி அல்ல | இது பொது வழி அன்று |
| 66. | தென்றல் மெல்ல வீசின | தென்றல் மெல்ல வீசியது |
| 67. | வாகனத்தை இடது பக்கம் திருப்பாதே | வாகனத்தை இடப்பக்கம் திருப்பாதே |
| 68. | வலது பக்கச் சுவரில் எழுதாதே | வலப்பக்கச் சுவரில் எழுதாதே |
| 69. | நம் தேசியக் கொடியில் மூவண்ணம் உள்ளது | நம் தேசியக் கொடியில் மூவண்ணங்கள் உள்ளன |
| 70. | நான் ஒரு புதிய நூல் ஒன்று வாங்கினேன் | நான் ஒரு புதிய நூல் வாங்கினேன் |
| 71. | கண்ணன் முருகன் மற்றும் வேலன் வந்தனர் | கண்ணன், முருகன், வேலன் ஆகியோர் வந்தனர் |
| 72. | தலைவி தலைவனோடு சென்றார் | தலைவி தலைவனோடு சென்றாள் |
| 73. | கட்சிச் சண்டைகள் பிளவை உண்டாக்குகிறது | கட்சிச் சண்டைகள் பிளவை உண்டாக்கும் |
| 74. | சில வீரர் நாட்டிற்காகத் தன் இன்னுயிர் ஈந்தனர் | வீரர்கள் சிலர் நாட்டிற்காகத் தன் இன்னுயிர் ஈந்தனர் |
| 75. | அங்கே வருவது கோமதி அல்ல | அங்கே வருவது கோமதி அல்லள் |

எம். ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி,
நாகர்கோவில் - 4.
9843448095

Scanned by CamScanner